**செய்தி வெளியீடு எண்:196** **நாள்: 10.04.2017**

# செய்தி வெளியீடு

## <u>கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ் தனியார் பள்ளிகளில் சேர்க்கைக்கு ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்க வசதி</u>

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, சட்டப் பிரிவு 12 (1) (சி) ன் கீழ் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் 25 % ஒதுக்கீட்டில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளை சேர்க்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்பொருட்டு அரசால் ஏற்கனவே வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு 2013–2014ம் கல்வியாண்டு முதல் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த குழந்தைகள் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

2013–2014 மற்றும் 2014–2015ம் ஆண்டுகளில் சேர்க்கை செய்யப்பட்டு 2015–2016ம் ஆண்டில் தொடர்ந்து கல்வி பயின்றுவரும் குழந்தைகள் மற்றும் 2015–16ம் ஆண்டில் சேர்க்கை செய்யப்பட்ட குழந்தைகளுக்கான தொகை ரூ.125 கோடி தமிழக அரசால் அனுமதிக்கப்பட்டு அரசாணை எண் 52 பள்ளிக் கல்வி (பொநூ2)த் துறை நாள் 24.03.2017 வெளியிடப்பட்டுள்ளது. இந்தத் தொகை விரைவில் பள்ளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

சட்டத்தின் நோக்கம் முழுமையாக நிறைவேறும் வகையிலும், வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் அதிக அளவில் பயன்பெறும் வகையிலும், வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்யும் பொருட்டும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களுடன் கீழ் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதலும் கூடுதலாக அரசால் வழங்கப்படுகிறது.

1. 2017–2018ம் கல்வியாண்டிற்கு மாநிலம் முழுவதுமுள்ள 9000 சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிபள்ளிகளில் (மெட்ரிக் / மழலையர் மற்றும் துவக்கப்பள்ளி) நுழைவு நிலை வகுப்பில் 25% ஒதுக்கீட்டின் கீழ் 1,26,262 இடங்களுக்கான மாணவர் சேர்க்கைக்கு இணைய வழியில் விண்ணப்பிக்கலாம்.

2. இதற்கான வசதி www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெற்றோர்கள் அவரவர் இருக்கும் இடத்தில் இருந்தே இதற்கான விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்யலாம். விண்ணப்பம் வெற்றிகரமாகப் பதிவேற்றம் செய்யப்பட்ட விபரம், பதிவு செய்யப்பட்ட பெற்றோரின் கைபேசி எண்ணிற்குக் குறுஞ்செய்தியாக அனுப்பப்படும்.

3. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள முதன்மைக் கல்வி அலுவலர் / மாவட்டக் கல்வி அலுவலர் / மெட்ரிக்குலேசன் பள்ளிகள் ஆய்வாளர் / மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் / உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் / வட்டார வள மைய மேற்பார்வையாளர் ஆகியோரது அலுவலகங்களில் எவ்விதக் கட்டணமும் இல்லாமல் விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்திட உரிய வசதிகள் செய்யப்படும்.

4. மேலும் மாநிலம் முழுவதும் உள்ள 10,000 திற்கும் மேற்பட்ட அரசு இ–சேவை மையங்களைப் பதிவேற்றம் செய்வதற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

5. ஒவ்வொரு பள்ளியிலும் நிர்ணயிக்கப்பட்ட இடங்களைவிட அதிகமாக விண்ணப்பங்கள் பெறப்படின் வெளிப்படையான முறையில் குலுக்கல் நடத்தி தேர்வு செய்யப்படும். அந்தந்த பள்ளியில் குறிப்பிட்ட நாளன்று நடந்திடும் குலுக்கல் நிகழ்வுகளை கல்வித் துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சியர் நியமிக்கும் இதர அரசுத் துறையினரும் கண்காணிப்பர்.

6. வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினரின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள, ஆதரவற்றவர் / எச்.ஐ.வி பாதிக்கப்பட்டவர் / மூன்றாம் பாலினத்தவர் / துப்புரவுத் தொழிலாளிகளின் குழந்தைகள் / மாற்றுத்திறனாளிகள் போன்றோரிடமிருந்து பெறப்படும் தகுதியான விண்ணப்பங்களுக்கு குலுக்கல் நடத்துவதற்கு முன்னரே முன்னுரிமை அளித்து சேர்க்கை வழங்கப்படும்.

7. மாவட்ட வாரியான சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளின் பட்டியல் மற்றும் அப்பள்ளிகளில் 25% இட ஒதுக்கீட்டின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை www.dge.tn.gov.in என்ற இணைய தளத்தில் வெளியிடப்படும்.

8. ஏப்ரல் 20ம் தேதி முதல் மே 18ம் தேதிவரை இணைய வழியில் விண்ணப்பிக்கலாம்.

மேற்காணும் வழிகாட்டுதலின்படி சமுதாயத்தில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் சேரும் வாய்ப்பினைச் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**